NA

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Normal (Academic) Level

# தமிழ்

1198/2

தாள் 2

**TAMIL**
Paper 2

**SPECIMEN PAPER**
*With effect from 2024 examination*

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3 பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.



Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் (5 மதிப்பெண்கள்)**

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய வட்டத்தை விடைப்புத்தகத்தில் நிழலிடவும்.

**1** திருக்குறள் விழாவில் உரையாற்றிய சிறப்புப் பேச்சாளர் திருக்குறளை நன்கு ________ என்பதை நிரூபித்தார்.

**2** தனக்குக் கொடுக்கப்படும் பணி சவால்மிக்கதாக இருந்தாலும் அதனை _________ திறம்படச் செய்யும் பாலனைப் பலரும் விரும்பினர்.

**3** பல ஆண்டுகளாக _________ இருந்த இரு நாட்டுத் தலைவர்களும் பயங்கரவாதச் செயல்களைத் தடுக்க ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கியுள்ளனர்.

**4** சந்திரன் வெளிநாட்டுக்குச் சென்ற பின்னர் அவருடைய வியாபாரத்தைச் சரிவர நடத்த ஆளில்லாததால் அது _________ நிலையில் இருந்தது.

**5** பாலன் தன் மேலதிகாரியிடம் நற்பெயரைப் பெறுவதற்காக அவர் கூறியதற்கெல்லாம் _________ மற்ற ஊழியர்களின் வெறுப்புக்கு ஆளானான்.

| | | | |
|---|---|---|---|
| (A) | தலை முழுகும் | (B) | நெளிவு சுளிவாக |
| (C) | ஒத்தூதியதால் | (D) | செவிசாய்த்ததால் |
| (E) | ஆழம் பார்த்தவர் | (F) | கையைக் கடிக்கும் |
| (G) | எதிரும் புதிருமாக | (H) | தலைமேற்கொண்டு |
| (I) | ஒற்றைக் காலில் நின்று | (J) | கரைத்துக் குடித்தவர் |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்கள் பனுவலின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய வட்டத்தை விடைப்புத்தகத்தில் நிழலிடவும்.

இன்று உலகெங்கிலும் மிதிவண்டி முக்கியப் போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்தப்படுகிறது. உலக நாடுகள் போக்குவரத்து நெரிசலை **(6)_________** மிதிவண்டியின் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றன. இதன்மூலம் காற்று மாசுபடுவதைக் குறைக்க இயலும் என நம்பப்படுகிறது. மக்களிடையே மிதிவண்டி ஓட்டுவதன் பயன்கள் பற்றிய **(7)_________** ஏற்படுத்த ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் உலக மிதிவண்டி தினம் கொண்டாடப்படுகிறது.

அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் வாழும் மக்கள் தம் பணியிடங்களுக்கு மிதிவண்டியில் பயணம் செய்யும் **(8)_________** அதிகரித்து வருகிறது. சிங்கப்பூரில் மிதிவண்டி ஓட்டிச் செல்வதற்கு வசதியாகப் பல இடங்களில் தனிப்பாதைகள் **(9)_________** இருப்பதால் பலரும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். மேலும், உடற்பயிற்சி செய்யும் நோக்கத்தோடு அதிகமானோர் மிதிவண்டி ஓட்டுவதைக் காணமுடிகிறது. மிதிவண்டி ஓட்டுவதால் ஏற்படும் **(10)_________** மக்கள் அறிந்துள்ளனர் என்பதை இது உணர்த்துகிறது. இவ்வாறு பலரும் மிதிவண்டியைப் பயன்படுத்தத் தொடங்கினால் உலக நாடுகளின் முயற்சி கைகூடும்.

| | |
|---|---|
| (A) முறை | (B) போக்கு |
| (C) விலக்க | (D) நன்மைகளை |
| (E) விழிப்புணர்வை | (F) பொருத்தப்பட்டு |
| (G) அமைக்கப்பட்டு | (H) ஆரோக்கியத்தை |
| (I) முக்கியத்துவத்தை | (J) கட்டுப்படுத்துவதற்கு |

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

## ‘ஆ’ பிரிவு

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படித்து அவற்றிற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையின் எழுத்துக்குரிய வட்டத்தை விடைப்புத்தகத்தில் நிழலிடவும்.

பனுவல் 1

### சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்

திங்கட்கிழமை, செப்டம்பர் 2, 2024 இதழ் 9



பருவநிலை மாற்றத்தால் அதிகரித்துவரும் வெப்பநிலையைக் குறைத்துச் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன. சிங்கப்பூரில் 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு மில்லியன் செடிகளையும் மரக்கன்றுகளையும் நடுவதற்கான புதிய திட்டத்தை அரசாங்கம் அண்மையில் அறிவித்தது. சிங்கப்பூரின் பொருளியல், குடியிருப்புத் தேவைகளுக்காகப் பல இடங்களில் தாவர வளங்கள் அழிக்கப்பட்டுக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அப்படி அழிக்கப்பட்ட தாவர வளங்களுக்குப் பதிலாக அவற்றைவிட அதிகமான எண்ணிக்கையில் செடிகொடிகளும் மரங்களும் நடப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தில் சிங்கப்பூரர்களை ஈடுபடுத்தத் தேசியப் பூங்காக் கழகம் ‘மரம் ஒன்றை நடுவோம்’ என்னும் இயக்கத்தைத் தொடங்கியுள்ளது. இந்த இயக்கத்தின்மூலம் பொதுமக்கள் செடியையோ மரக்கன்றையோ வாங்கி அதைத் தாமே நடுவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இதன்வழி இயற்கையைப் பாதுகாப்பதற்கு மக்கள் தம் பங்கை ஆற்ற இயலும். மாணவர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபடும்போது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அறிந்துகொள்கின்றனர். இதன் விளைவாக மாணவர்கள் பலரும் மரங்களை நடுவதில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவர் என எதிர்பார்க்கலாம்.

**வினாக்கள்**

**11** அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டத்தின் நோக்கம் யாது?

(A) வெப்பநிலையைக் குறைத்துச் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது

(B) பல்வேறு இடங்களில் செடிகளையும் மரக்கன்றுகளையும் நடுவது

(C) அழிக்கப்பட்ட தாவர வளங்களை மீண்டும் அதிகளவில் உருவாக்குவது

(D) மக்களின் குடியிருப்புத் தேவைகளுக்காகத் தாவர வளங்களை வளர்ப்பது

**12** ‘மரம் ஒன்றை நடுவோம்’ என்னும் இயக்கத்தில் பங்கேற்கும் மாணவர்கள் எவ்வாறு பயனடைவர்?

(A) அவர்கள் இயற்கையைப் பாதுகாக்கப் பங்காற்றுவர்

(B) அவர்கள் மரங்கள் நடுவதில் ஆர்வத்துடன் ஈடுபடுவர்

(C) அவர்கள் செடிகளையும் மரக்கன்றுகளையும் நடுவதற்கு ஊக்குவிக்கப்படுவர்

(D) அவர்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குரிய வழிமுறைகளை அறிந்துகொள்வர்

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

பனுவல் 2

## கதை சொல்லும் கலை

பிள்ளைகளை மகிழ்விப்பதற்கும் பிள்ளைகளின் மனத்தில் நற்பண்புகளை விதைப்பதற்கும் பெரியவர்கள் கதைகள் கூறுவது உண்டு. சிறிய முயல் வலிமைமிக்க சிங்கத்தை வீழ்த்தியதையும் வேகமாக ஓடக்கூடிய முயலின் அலட்சியத்தால் மெல்ல நடக்கும் ஆமை வென்றதையும் கதைகளாகக் கூறும்போது அக்கதைகளின் கருத்துகள் குழந்தைகளின் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றன.

சிறுவர்கள் சிலர் ஒன்றுகூடி விளையாடும்போது அவர்களுக்குள் கதைகளைக் கூறிக்கொள்வதும் உண்டு. கதைகளைக் கூர்ந்து கவனித்தல், கேட்ட கதைகளை நினைவில் வைத்திருந்து அவற்றைத் திரும்பக் கூறுதல் முதலியவை கதை கேட்பவர்களின் நினைவாற்றலை வளர்க்கின்றன. மேலும், காலத்திற்கேற்பப் பழைய கதைகளைச் சற்று மாற்றி அவற்றின் வழியாகப் புதிய கருத்துகளைக் கூறும்போது கதை கூறுவோரின் கற்பனை ஆற்றல் மேம்படுகிறது.

கதைகளை நடித்துக்காட்டுவதும் கேட்பவர்களின் கவனத்தைக் கவரும்படியாகக் கூறுவதும் ஒரு கலை. இன்று இக்கலை மெல்ல மறைந்து வருகிறது. இன்று சிறுவர்கள் கதைகளை நேரடியாக ஒருவர் வாய்மொழியாகக் கேட்பதைவிடக் கணினி வழியாகக் கேட்பதையே விரும்புகிறார்கள். அவர்கள் கதைகளை இசையோடு கேட்டும் வண்ணப்படங்களோடு பார்த்தும் மகிழவே விரும்புகிறார்கள். ஆகையால், கதை கூறுவோரும் புதுப்புதுக் கதைகூறும் உத்திகளைக் கற்றுக்கொள்வதற்கு நேரத்தை ஒதுக்கித் தாங்கள் கையாளும் உத்திகளில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். இம்முயற்சிகள் மறைந்துவரும் இக்கலைக்குப் புத்துயிர் ஊட்டும்.

<u>வினாக்கள்</u>

**13** பெரியவர்களிடம் கதைகள் கேட்பதன் வாயிலாகப் பிள்ளைகள் எவ்வாறு பயனடைகிறார்கள்?

(A) அவர்கள் கதைகளைக் கேட்டு மகிழ்கிறார்கள்

(B) அவர்கள் கதைகளை நன்கு புரிந்துகொள்கிறார்கள்

(C) அவர்கள் நல்ல பண்புகளைக் கற்றுக்கொள்கிறார்கள்

(D) அவர்கள் கதைகள் கூறும் கருத்துகளைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்

**14** கதை கூறுபவர் எந்தத் திறனை வளர்த்துக்கொள்கிறார்?

(A) கற்பனைத்திறனை

(B) கூர்ந்து கவனிக்கும் திறனை

(C) கதைகளைப் பரிமாறிக்கொள்ளும் திறனை

(D) கதைகளை விறுவிறுப்பாகக் கூறும் திறனை

**15** கதை கூறும் கலை மறைந்து வரக் காரணம் யாது?

(A) சிறுவர்கள் கதைகளை விரும்பாதது

(B) மக்கள் இசையை அதிகம் விரும்புவது

(C) மக்கள் கதை கூறுவதற்கு நேரம் ஒதுக்காதது

(D) கேட்பவர்களின் ரசனையில் மாற்றம் ஏற்பட்டிருப்பது

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

**B4** பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பனுவலின் இடப்பக்கத்தில் வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினா எண்ணின் எதிரிலும் உள்ள வரியில் பிழையான சொல் ஒன்று அடிக்கோடிடப்பட்டுள்ளது. அப்பிழையான சொல்லைத் திருத்திச் சரியான சொல்லை விடைப்புத்தகத்தில் எழுதவும்.

| | |
|---|---|
| | பாரம்பரிய விளையாட்டுகள் ஓர் இனத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் |
| | அறிந்துகொள்ளத் துணைபுரிகின்றன. பழங்காலத்தில் தமிழர்கள் பாரம்பரிய |
| **(16)** | **<u>விளையாட்டுகளில்</u>** அதிக முக்கியத்துவம் அளித்தனர். கபடி, சிலம்பாட்டம் |
| | முதலான தமிழர்களது பாரம்பரிய விளையாட்டுகள் உடலுக்கு மட்டுமன்றி |
| **(17)** | உள்ளத்திற்கும் நன்மை **<u>அழிக்கின்றன</u>**. இருப்பினும், இக்காலத்தில் மக்கள் தம் |
| **(18)** | ஓய்வுநேரத்தின்போது **<u>அதில்</u>** ஈடுபடுவதைவிடத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் |
| **(19)** | சார்ந்த நடவடிக்கைகளில் நேரத்தைச் செலவிடவே விரும்புகின்றனர். **<u>ஆனால்</u>**, |
| | மக்களிடையே பாரம்பரிய விளையாட்டுகள் மீதுள்ள ஆர்வம் குறைந்துள்ளது. |
| **(20)** | மக்களிடையே இவ்விளையாட்டுகள் பற்றிய விழிப்புணர்வை **<u>ஏற்படுத்தி</u>**ப் |
| | பள்ளிகளும் சமூக அமைப்புகளும் முயல்கின்றன. பாரம்பரிய விளையாட்டுகள் |
| | தொடர்ந்து நிலைத்திருக்க இத்தகைய முயற்சிகள் பயனளிக்கும். |

# 'இ' பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல்** **(30 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து அதையொட்டிய வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடைப்புத்தகத்தில் விடை எழுதவும்.

| | |
|---|---|
| அனுப்புநர்: | nirmala@kgoomail.com |
| பெறுநர்: | banu@kgoomail.com |
| தேதி: | 16/09/2024 |
| பொருள்: | என் அனுபவம் |

அன்புள்ள பானு,

1 பல ஆண்டுகளுக்குப் பிறகு உன்னிடமிருந்து ஒரு மின்னஞ்சல் வரும் என நான் எதிர்பார்க்கவே இல்லை. எனக்கு இன்ப அதிர்ச்சி அளித்துவிட்டாய் பானு! இவ்வளவு காலம் கழித்துத்தான் உனக்கு என் ஞாபகம் வந்ததா? **நான் இவ்வாறு எண்ணுவது தவறுதான்.** மன்னிக்கவும். நீ எனக்கு மின்னஞ்சல் எழுதவில்லை என்றாலும் நான் உனக்கு எழுதியிருக்கலாம்.

2 உன்னையும் நம் பள்ளி நண்பர்களையும் பற்றி நான் எண்ணாத நாளே இல்லை. இந்தப் பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் அந்த நினைவுகளே நான் மனவுளைச்சலிலிருந்து விடுபடத் துணைபுரிகின்றன. நாம் பழகிய நாள்கள் பசுமையான நினைவுகளாக மட்டுமல்லாது நல்ல படிப்பினைகளை உணர்த்தும் அனுபவங்களாகவும் இருக்கின்றன.

3 உனக்கு நினைவிருக்கிறதா? நமது இணைப்பாட ஆசிரியரோடு மலையேறும் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மலேசியா சென்றிருந்தோமே! அப்பயணத்திற்குமுன் அந்த மலையைப் பற்றிய தகவல்களையும் அது அமைந்துள்ள இடத்தின் வரலாற்றையும் அறிந்துகொள்ளும் ஆவலோடு இணையத்தளங்களை நாடினோம். நாம் எதிர்பார்த்த தகவல்கள் கிடைக்காததால் நமது பொறுப்பாசிரியரை அணுகினோம். அவரும் சலிப்பின்றிப் பல தகவல்களை நம்மோடு பகிர்ந்துகொண்டார். மலையேறும் நாளன்று கொட்டித் தீர்த்த மழை நமது நடவடிக்கைக்கு இடையூறாக அமைந்தது. இருப்பினும், நமது மனவுறுதி அந்நடவடிக்கையை வெற்றிகரமாக முடிக்க உதவியது. அதோடு, மலையேறும்போது நம் குழுவினரிடையே **<u>நிலவிய</u>** கருத்து வேறுபாடுகள் மழையைவிடப் பெரும் இடைஞ்சலாக அமைந்துவிட்டன. எனினும், மலையேறும்போது நாம் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்ட விதமும் காட்டிய அக்கறையும் சோர்வடைந்த நம் உள்ளங்கள் புத்துணர்ச்சி பெற உதவின.

4 மலையேறும் நடவடிக்கை நமக்குத் தந்த படிப்பினைகள் ஏராளம். நம்மிடம் அன்போடு பேசிவிட்டால் மட்டும் ஒருவர் நல்ல நண்பராகிவிட முடியுமா? நமது கருத்துகளைக் காதுகொடுத்துக் கேட்பதால் மட்டும் ஒருவர் நல்ல நண்பராகிவிடமாட்டார். அதற்கும் மேலாக, ஒருவருக்குத் துன்பம் வந்ததை அறிந்தவுடனே அவரது துன்பத்தை நீக்க

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

முயல்பவரே நல்ல நண்பராவார். இந்த உண்மையை எனக்கு அந்நடவடிக்கை உணர்த்தியது. பானு, உன்னிடம் பகிர்ந்துகொள்ள இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. நாம் நேரில் சந்தித்துப் பேசும் நாளுக்காகக் காத்திருக்கிறேன்.

உன் அருமைத் தோழி நிர்மலா.

<u>வினாக்கள்</u>

**21** ‘நான் இவ்வாறு எண்ணுவது தவறுதான்.’ என்று நிர்மலா எதைக் குறிப்பிடுகிறாள்? அவள் ஏன் அவ்வாறு குறிப்பிடுகிறாள்? (5 மதிப்பெண்கள்)

**22** பனுவலை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் சரியா தவறா என்று எழுதவும். பின்னர், உன் விடைக்குரிய காரணத்தையும் எழுதவும். (5 மதிப்பெண்கள்)

| வாக்கியம் | சரி/தவறு | காரணம் |
|---|---|---|
| நிர்மலாவிற்கு அவளது பள்ளி நினைவுகள் மனவுளைச்சலை ஏற்படுத்துகின்றன. | (A) | (B) |
| நிர்மலா தன் பள்ளியில் பெற்ற படிப்பினைகள் இன்றும் அவளுக்குப் பயனளிக்கின்றன. | (C) | (D) |

**23** நிர்மலாவும் பானுவும் மலேசியப் பயணத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினர் என்பதை எவ்வாறு அறியலாம்? (5 மதிப்பெண்கள்)

**24** மலையேறும் நடவடிக்கையின்போது மாணவர்கள் எதிர்நோக்கிய சிரமங்கள் யாவை? அவர்கள் அவற்றை எவ்வாறு எதிர்கொண்டனர்? (6 மதிப்பெண்கள்)

| சிரமங்கள் | சிரமங்களை எதிர்கொண்ட முறை |
|---|---|
| (A) | (B) |
| (C) | (D) |

**25** நல்ல நண்பர் எப்படிப்பட்ட இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று நிர்மலா கருதுகிறாள்? (6 மதிப்பெண்கள்)

**26** 2-ஆம் பத்தியில், ‘மீள்வதற்கு’ என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

**27** 4-ஆம் பத்தியில், நிர்மலாவும் அவளது நண்பர்களும் மலையேறும் நடவடிக்கையின் வாயிலாகக் கற்றுக்கொண்டவற்றை எந்தச் சொல் உணர்த்துகிறது என்பதைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

**28** பின்வரும் சொல் பனுவலில் உணர்த்தும் பொருளை எழுதவும்.

நிலவிய (1 மதிப்பெண்)

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.